# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2020

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | |

**நேரம்:3.00 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள்:90**

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும்பயன்படுத்த வேண்டும்.

(3) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி -I 14×1=14

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**(கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.)**

1) பாயிரம் இல்லது ________ அன்றே

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

2) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை.

அ) மதிப்பு கூட்டுப் பொருட்கள் ஆ) நேரடிப் பொருள்கள்

i) அ - மட்டும் சரி ii) ஆ - மட்டும் சரி

iii) இரண்டும் சரி iv) அ - தவறு, ஆ - சரி

3) காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

4) நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?

அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு.

5) 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

6) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?

அ) மொழி பெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

7) சரியானதைத் தேர்ந்தெடுக்க

அ) வரை - மலை ஆ) வதுவை - திருமணம்

இ) வாரணம் - யானை ஈ) புடவி - கடல்

i) அ, ஆ, இ - சரி ஈ - தவறு ii) ஆ, இ, ஈ - சரி அ - தவறு

iii) அ, இ, ஈ - சரி ஆ - தவறு iv) அ, ஆ, ஈ - சரி இ - தவறு

8) கீழுள்ளளவற்றைப் பொருத்தி விடை தேர்க

அ) விரியன் - 1) தண்டை

ஆ) திருகுமுருகு - 2) காலாழி

இ) நாங்கூழ்ப்புழு - 3) சிலம்பு

ஈ) குண்டலப்பூச்சி - 4) பாடகம்

i) 3 4 2 1 ii) 3 1 4 2

iii) 4 3 2 1 iv) 4 1 3 2

9) பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று.

அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுப்றை

10) 'ஜனப்பிரீளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

11) அழகும், அறிவும், இளமையும் வாய்த்தவன் - யார் யாரிடம் கூறியது?
அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

12) ஆக்கப்பெயர் விகுதிபெறாத சொல்லைத் தேர்க.
அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

13) யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர்மொழி.
அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

14) தமிழின் முதல் பா வடிவ நாடக நூல்.
அ) இரகசியவழி ஆ) மனோன்மனியம்
இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×2=6

15) ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

16) காவடிச் சிந்து என்பது யாது?

17) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிபடுத்துக.

18) உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×2=4

19) பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிபாட்டுச் சக்திமிக்கது ஏன்?

20) உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறைக் குறித்து குறிப்பு வரைக.

21) இந்திய கட்டட கலையின் மூன்று வகைகள் யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** 7×2=14

22) மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் யாவை?

23) அலர்ந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24) விகுதிகள் எவற்றை உணர்த்தும்?

25) உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?

26) நெருங்கின, இரங்கி - உறுப்பிலக்கணம் தருக.

27) கலைசொல்லாக்கம் பொருள் தருக.

28) அலைகடல், புதுக்கியவர் - இலக்கணக் குறிப்பு தருக.

29) திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக.

30) கலைச் சொல் எழுதுக: 1) Fine arts 2) Myth

## பகுதி - III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

31) காற்றறில் ஆடும் புல். வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது?

32) "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

33) ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பெருள், கருப்பொருள்களை அட்டவணைப் படுத்துக.

34) மேகத்திடம் கூறுவது போல தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

### பிரிவு - 2

**2×4=8**

**எவையேனும் இரண்டனுக்கு விடை , தருக.**

35) 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவீர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.

36) வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

37) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

38) தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப் படுத்துக.

### பிரிவு - 3

**3×4=12**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**குறிப்பு: காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் வினா எண்.42க்கு பதிலாக மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.**

39) **பிறிதுமொழிதள் அணி** அல்லது **சொற்பொருள் பின்வரும் நிலை அணியை** விளக்கி தகுந்த குறட்பாவுடன் பொருத்திக் காட்டுக.

40) இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏதேனும் மூன்று நயங்கள் மட்டும்)

**செந்நெல்லும் கரும்பும் விளைந்தனவே - நல்ல**
**தேன்பொழி மலர்களும் விரிந்தனவே**
**இன்னலும் பசியும் போயொழிக - தேசம்**
**எழிலுடன் கூடியே நலமுறுக**
**பிரிவுகள் பேசியே பூசலிட்ட - பழம்**
**பேதமை தனைத்தள்ளி அனைவருமே**
**ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் - நம்முள்**
**ஒற்றுமை ஓங்கிட செய்திடுவோம்.**

-- பெ. தூரன்

41). பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.
தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.
இலவுக்காத்த கிளிப் போல

42) **தமிழாக்கம் தருக:**

1) Successful people have two things on their lips, silence and smile. Smile to solve problem and silence to avoid problem.
2) Men must be decided on what they will not do, and then they are able to act with vigor in what they ought to do.
3) The happiness of your life depends upon the quality of your thoughts.
4) We all have two lives. The second one starts when we realize we have one.

**குறிப்பு: காதுகேளாத மாணவர்களுக்கான மாற்றுவினா. பின்வரும் பத்தியை கவனமாக படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

"வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்னும் வழுவான ஒற்றைவரி நம்முள் அழுத்தமாக பதிகிறது. இது திகட்டாத தெள்ளுத்தமிழ் திருவருட்பா தந்த வள்ளலாரின் கூற்று. அவர் அமைதி, அன்புவழியிலான சமூகத்தை உருவாக்க விரும்பினார். கடவுள் என்பது ஒன்றே என்றார். சாதி, மத, இன பால் வேறுபாடுகள் கடந்த அருட்பெருஞ்ஜோதி ஒன்றே இறைவன் என்பதை வலியுறுத்தினார். ஏழு வயதிலேயே கவிபாடும் வள்ளமைப் பெற்று தெய்வமணிமாலை, கந்தர் சரவணப்பத்து ஆகிய நூல்களை உருவாக்கியவர் வள்லார். மநுமுறை கண்ட வாசகம் என்னும் உரைநடை நூலை நமக்கு நல்கியவர்: ஒழிவில் ஒடுக்கம், தொண்டமண்டல சதகம், சின்மய தீபிகை ஆகிய நூல்களைப் பதிப்பித்தவர் வள்ளலார். அவர் சாதி, சமய, மத, வேறுபாடுகள் கடந்து அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு பாராட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தைத் தோற்றுவித்தார். சத்திய தர்ம சாலையைத் தொடங்கினார். தெய்வங்கள் பல எனச் சொல்லும் உருவ வழிபாட்டை மறுத்தார். பசி இன்றி அனைத்து உயிர்களும் இன்பமுடன் வாழ வலியுறுத்திய வள்ளலாரின் சில கொள்கைகள் பின்வருமாறு.

கடவுள் ஒருவரே அவரை சோதி வடிவில் உண்மை அன்பால் வழிபட வேண்டும் சிறு தெய்வ வழிபாடு கூடாது. அத்தெய்வங்களின் பெயரால் உயிர் பலி கூடாது. புலால் உ.ண்ணலாகாது. சாதி, சமயம் முதலிய வேறுபாடுகள் கூடா. எவ்வுயிரையும் தம் உயிர் போல எண்ணி ஒழுகும் ஆன்மநேய ஒருமைபாட்டுரிமையை கடைபிடிக்க வேண்டும். எதிலும் பொதுநோக்கம் வேண்டும். புராணங்களும் சாத்திரங்களும் முடிவான உண்மையை தெரிவிக்க மாட்டா. மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டும்.

**வினாக்கள்:**

1) அருட்பெருஞ்சோதி - பிரித்து எழுதுக.
2) கூடா, கூடாது - பொருள் வேறுபாடு தருக.
3) சத்தியம், தருமம் - இணையான தமிழ் சொல் தருக.
4) விரும்பினார் - இவ்வினை முற்றை வினையாலணையும் பெயராக மாற்றுக.
5) உங்களைக் கவர்ந்த வள்ளலாரின் கருத்து ஒன்றை குறிப்பிடுக.

## பகுதி - IV

**3×6=18**

**இருப்க்கங்களுக்கு மிகாமல் விடை தருக.**

44) அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) அறிவியல் சிந்தனைகள் நிரம்பிய காப்பியம் நீலகேசி - இக்கருத்தினை நும் பாடப்பகுதி வாயிலாக ஆராய்க.

45) அ) இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.

**(அல்லது)**

ஆ) தாம் வாழ்ந்த கால கட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

46) அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.**

47) அ) "**அம்ம வாழி**" எனத் தொடங்கும் பாடலை எழுதுக. 4

ஆ) "**பற்றுக**" எனத் தொடங்கும் குறளை எழுதுக. 2

*****************